செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

சத்யமேவ ஜயதே

நாள் : 01.08.2022

# அகராதியியல் புலம்

**நடத்தும்**

**செம்மொழி இலக்கண, இலக்கிய இருவழி**
**(தமிழ் – ஆங்கிலம்; ஆங்கிலம் – தமிழ்)**
**கலைச்சொல்லாக்கம்**

**பயிலரங்கம் - 6**

**(23.08.2022 - 29.08.2022 )**

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ்மொழி இலக்கண, இலக்கியங்களுக்குப் பொருள் அறிய உதவும் அகராதிகளின் முன்னோடியாகத் திகழ்வது தொல்காப்பியம் ஆகும். சொற்பொருளின் இன்றியமையாமையைத் தொல்காப்பியர்,

**“ எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே “** ( தொல் : 640 )

என்னும் நூற்பாவில் குறிப்பாகச் சுட்டுவார்.

தமிழில் அகராதிகள், பேரகராதிகள், கலைக்களஞ்சியங்கள், சொற்களஞ்சியங்கள், பொருட்களஞ்சியங்கள் போன்றவை பெருமளவில் வெளிவந்திருப்பினும் தொல்காப்பியம், சங்க இலக்கியங்களிலிருந்து மேலும் விரிவாகக் கலைச்சொற்களைத் திரட்ட வேண்டியுள்ளது.

தமிழ் இலக்கண, இலக்கியங்களில் பெருமளவு கலைச்சொற்கள் பயின்றுவரக் காணலாம். தமிழ் ஆய்விற்குச் சொற்பொருள் விளக்கங்கள் இன்றியமையாதவை. இதனைக் கருத்தில் கொண்டு தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் பயிலும் கலைச்சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு ஆங்கில நிகரன்கள்/ விளக்கங்கள் காணுதல் ; ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு தொல்காப்பிய, சங்க இலக்கியங்களில் நிகரன்கள்/விளக்கங்கள் காணுதல் ; தொல்காப்பிய, சங்க இலக்கியப் புரிதலுக்கும் ஆய்வுக்கும் துணைபுரியும் திறனாய்வுக் கலைச்சொற்களைத் தெரிவு

செய்து அவற்றிற்கு நிகரன்கள்/ விளக்கங்கள் காணுதல் ஆகியவை ஆய்விற்குத் தேவையாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அகராதியியல் புலம் “செம்மொழி இலக்கண, இலக்கிய இருவழி (தமிழ் – ஆங்கிலம்; ஆங்கிலம் – தமிழ்) கலைச்சொல்லாக்கம்” என்னும் தலைப்பிலான பயிலரங்கை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிலரங்கில் தமிழ், ஆங்கிலம் மற்றும் மொழியியல் ஆகிய துறைகளில் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவ/மாணவியர்கள் கலந்துகொண்டு பயன் பெற அழைக்கப்படுகிறார்கள்.

இப்பயிலரங்கில் இருமொழிப் புலமை பெற்ற பேராசிரியர்கள் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். மேலும் இப்பயிலரங்கில் கலைச்சொல்லாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

பயிலரங்கின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு :

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை **20.**
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்:**23.08.2022** முதல்**29 .08 . 2022** வரை(தொடர்ந்து 7 நாள்கள்).
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன்கீழ் தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து **workshoplexi@cict.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக தொடர்புகொள்ள வேண்டும்.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் ஆணை அனுப்பி வைக்கப்படும்.
11. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
12. விண்ணப்பம் வந்து சேரவேண்டிய இறுதி நாள்: 11**.08.2022** இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **12 .08.2022** அன்று மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100


सत्यमेव जयते

**செம்மொழி இலக்கண, இலக்கிய இருவழி**
**( தமிழ் - ஆங்கிலம் ; ஆங்கிலம் – தமிழ்)**
**கலைச்சொல்லாக்கம்**

(23.08.2022 – 29.08.2022)

**பயிலரங்கம் - 6**

**விண்ணப்பப் படிவம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்<br>Name | தமிழ்/ Tamil<br>ஆங்கிலம்/ English | | | | நிழற்படம்<br>[Photo] | |
| 2. | பிறந்த நாள் / வயது\|<br>Age / Day of Birth | | | | | | |
| 3. | பாலினம் \| Gender | | | | | | |
| 4. | வகுப்பு \| Class | பொது\|<br>General | | இ.பி.வ.\|<br>OBC | | பட்டியல் இனம்<br>\| SC. ST | |
| 5. | கல்வித் தகுதி \| Educational Qualification | | | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு \|<br>M. Phil / Ph.D. – Date of joining/year | | | | | | |
| 7. | ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் ஆய்வுத் தலைப்பு \| M. Phil / Ph.D. Research Topic | | | | | | |
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொலைப்பேசி/ மின்னஞ்சல் \| University / College / Address (Phone / Email) | | | | | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி)<br>\| Home address (Phone) | | | | | | |
| 10. | புலன எண் \| WhatsApp number | | | | | | |
| 11. | செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக \| Did you attend the workshop conducted by the CICT this academic year? If yes, please give details | ஆம் \| Yes<br>இல்லை\| No | | | | | |

நாள்: (கையொப்பம்)

இடம்:

நெறியாளர் /துறைத் தலைவர்/ முதல்வர்/ பதிவாளர்
உரிய முத்திரையுடன்